# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணித் தேர்வு, ஆண்டு I - 2019

## அரசியலமைப்புச் சட்டம் - I

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 07

எவையேனும் <u>நான்கு (04)</u> வினாக்களுக்கு மட்டும் விடை தருக

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. அரசியலமைப்பு அபிமாணியமானது சட்டவாட்சிக் கோட்பாட்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. சட்டவாட்சியானது எதேர்ச்சையான அதிகாரப் பிரயோகத்தினை மட்டுப்படுத்துதல் அல்லது சாத்தியமான நீக்கம் தொடர்பில் முதன்மையாக இலக்கு வைக்கின்றது. மறுபுறமாக, அரசியலமைப்பு அபிமாணியத்தினது ஏற்புடைமையில் அதன் பரப்பெல்லையானது பரந்துபட்டதாகும்.

   நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் பொருத்தமான தீர்ப்புச்சட்ட அதிகார ஆதாரங்களையும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் எடுத்தியம்பி உமது விடைக்கான காரணங்களைத் தருக.

2. சமகால இலங்கையின் அரசியலமைப்பு ஆட்சிமுறையின் புரிதலானது தற்போதுள்ள அரசியலமைப்பிற்கு முன்னைய இரு அரசியலமைப்புகளுடன் ஒப்பிடுவதற்கான முயற்சியினால் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இம்மூன்று அரசியலமைப்புகளும் அதிகாரப் பரவலாக்கம், நீதித்துறைச் சுதந்திரம் மற்றும் தனிப்பட்ட தன்னாட்சி ஆகியவற்றைக் கையாண்டபோதிலும் கூட, அவற்றின் உள்ளடக்கம் மற்றும் ஏற்புடைமை தொடர்பில் முற்றிலும் அவை வேறுபடுகின்றது.

   மேலுள்ள கூற்றினை அம்மூன்று அரசியலமைப்புகளிலிருந்தும் பொருத்தமான ஏற்பாடுகளை எடுத்தியம்பி நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

3. வலுவேறாக்கக் கோட்பாடானது அதிகாரத் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதனையே கருதுகின்றது. ஆயினும், அரசின் மூன்று உறுப்பமைப்புக்களும் தனித்துவிடப்பட்டு அல்லது முழுமையாக பகுத்தாளப்பட்டு தொழிற்படுவதை அது முன்மொழியவில்லை. அத்தகைய விதமான முறையில் தொழிற்படுதலானது அரசியலமைப்பு ஜனநாயகமொன்றிற்குள் நடைமுறைப் படுத்தவியலாததாகும்.

மேலுள்ள கூற்றினை பொருத்தமான தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்கள் மற்றும் அரசியலமைப்பின் பொருத்தமான ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டி நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க. இலங்கை மற்றும் உமது தெரிவிலான மற்றுமொரு நியாயாதிக்கத்திலிருந்து உதாரணங்களை எடுத்தியம்புவதன் மூலம் உமது விடையை ஆதாரப்படுத்துக.

4. லகா என்பது பொதுநலவாய நாடொன்றாகும். 2016இல் லகாவின் நிறைவேற்று அதிகாரங் கொண்ட சனாதிபதியாகிய திரு.லோகி என்பவரால் மதிப்புக்குரிய விஜய என்பவர் லகாவின் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். முதுநிலைமிக்கவரும் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட உடனடுத்து ஒழுங்கில் இருப்பவருமான மாண்பமை நீதியரசர் டியா அவர்களைப் புறக்கனித்துச் செய்யப்பட்ட இந்த நியமனமானது பரந்தளவில் பிரசுரிக்கப்பட்டது. நீதியரசர் விஜய கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் பதவி விலகலுக்கான திகதியிடப்படாத கடிதமொன்றில் கையெழுத்திட கட்டாயப்படுத்தப்பட்டதாக மேலும் அறிக்கையிடப்பட்டது. பிரதம நீதியரசர் விஜயவின் மீது நம்பிக்கையில்லா பிரேரணைக்கான நடவடிக்கைகளை திரு.லோகி என்பவர் தொடங்க விரும்புவதாக சாட்டுதல் செய்யப்பட்டது. நீதித்துறையின் மீது நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிப்பவராக திரு.லோகி அறியப்படுகின்றார்.

'லக் மோர்னிங் ஸ்டார்' என்ற செய்தித்தாளில் அண்மையில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றில் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளத்தைக் குறைப்பதாகவும் அரசியலமைப்பின்படி அவர்கள் ஓய்வு பெறுவதற்கான வயதை அடைவதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட நீதிபதிகள் கட்டாய ஓய்வில் கட்டாயப்படுத்தி அனுப்புதலுக்கான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கிறது. சனாதிபதியின் பதவிகாலத்தினை நீட்டிப்பதற்கான சட்டமூலமானது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் இவ்வச்சுறுத்தல்களானவை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

லகாவின் அரசியலமைப்பு ஆட்சிமுறையானது இலங்கையினதைப் போன்றதாகும் என்று கருதிக் கொள்க. நீதித்துறைச் சுதந்திரத்தின் பின்னணியில் மேலுள்ள சந்தர்ப்பத்தினை ஆராய்க. தேவையேற்படுமிடத்து, பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள், தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான நிகழ்வுதாரணங்களை உமது விடையானது எடுத்தியம்புதல் வேண்டும்.

5. இலங்கையில் நீண்ட காலதாமதத்திற்கு உட்பட்டிருக்கின்ற அரசியலமைப்பு சனநாயகத்தை நோக்கிய நேர்மறையான திருத்தங்களை 19ஆம் திருத்தமானது அறிமுகஞ்செய்துள்ளது. 19ஆம் சீர்த்திருத்தமானது அவ்வாறிருந்தபோதிலும், 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் இலங்கையின் சனாதிபதியால் பிரயோகிக்கப்படுகின்ற முக்கிய அதிகாரங்கள் மாற்றத்திற்கு உட்படாதிருக்கின்றது.

   மேலுள்ள கூற்றினை அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பின்னணியில் நுணுக்கமாக மதிப்பீடு செய்க. உமது விடையானது அண்மைய உதாரணங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. சமன் என்பவன் அரச நிர்வாக அதிகாரி ஒருவனாவான் என்பதுடன் அவன் பெண்பாற் சேர்க்கையாளர், ஆண்பாற் சேர்க்கையாளர், இருபாலுறவு மற்றும் மாற்றுப்பாலினர் (LGBT) கழகத்தின் செயற்பாடு அங்கத்தவனொருவனுமாவான். அவன் LGBT சமுதாயத்தின் உரிமைகளை மேம்படுத்துவதில் பலமானதொரு செயற்பாட்டாளனாவான். சுகாதார அமைச்சின் நிர்வாகப் பணிப்பாளர் பதவிக்கு சமன் விண்ணப்பித்த போது, தேவையான அனைத்துத் தகுதிகளையும் சமன் கொண்டிருந்தபோதிலும், அப்பதவியை அமைச்சின் செயலாளரான திரு ராஜ் என்பவர் வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தார். நேர்முகத்தேர்வில் சிறப்பாகச் செயற்படாதபோதிலும், அவரின் LGBT இற்கு எதிரான நோக்குகளினால் அறியப்பட்டவனான பெரேரா என்பவனுக்கு அப்பதவியானது வழங்கப்பட்டது. நேர்முக தேர்வுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர், சுகாதார அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட விருந்துபசாரத்தில், சமனை அவரது பாலியல் நோக்குநிலை மீது தரக்குறைவான கருத்துக்களைத் தெரிவித்து ராஜ் அவமதித்தார்.

   செயலாளரின் தீர்மானத்திற்கு எதிராக தனக்கு ஏதேனும் நிவாரணம் உள்ளனவா என சமன் உங்களிடம் கலந்தாலோசனை செய்கின்றான். சமனுக்கு ஆலோசனை கூறுக.

7. அ அல்லது ஆ இற்கு மட்டும் விடை தருக.

அ. பிரதிநிதித்துவ ஜனநாயக முறையினை ஏற்றுக்கொண்ட தெற்காசியாவின் பழமையான சனநாயகங்களில் இலங்கையும் ஒன்றாகும். எனினும், நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறைகளுக்கான பொருத்தமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு அரசியலமைப்பினால் விதந்துரைக்கப்பட்டு நிறைவேற்றுத்துறைக்கும் அதே போல சட்டவாக்கத்துறைக்கும் போட்டியிடுவதற்கு தேவைப்படுத்தப்படும் தகுதிகள் முற்றிலும் போதாதவையாக இருக்கின்றன. மக்களின் இறைமையை இந்த இடைவெளியானது தரங்குறைக்கிறது.

மேலுள்ள கூற்றினை பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பின்னணியில் நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

–அல்லது–

ஆ. மக்கள் தங்களது சட்டவாக்க தத்துவங்களைப் பிரயோகிக்க அனுமதிக்கும் முறைகளில் ஒன்று மக்கள் தீர்ப்பு ஆகும். 1978ஆம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் மக்கள் தீர்ப்பொன்றில் வாக்களிப்பதற்கான மக்களின் தத்துவமானது தெரிவுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக வரையறுக்கப்பட்டு இருந்துவந்துள்ளது.

பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பின்னணியில் மேலுள்ள கூற்றின் மீது கருத்துரை செய்க.

****************